09.06.2026.

**Spl.C.C.No.20 of 2025** (Spl.C.C.No.1 of 2018 - CJM, Vellore)

P.W. 1 - மஞ்சுளா த/பெ.பொன்னுசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கேள்வி – என் மகள் திருமணத்திற்கு முன்பாக என்ன படித்திருந்தார் என்றால்?

பதில் – 12ம் வகுப்பு முடித்து ஒரு தாள் அரியர் வைத்து பின்னர் அதை பாஸ் செய்து B.A. English முடித்துவிட்டு Teacher Training முடித்துவிட்டார்.

கேள்வி – திருமணத்திற்கு முன்பு என் மகள் டிகிரி முடித்துவிட்டாரா என்றால்?

பதில் – B.A. English முடித்துவிட்டார்.

கேள்வி– அந்த சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்?

பதில்– தாக்கல் செய்யவில்லை.

கேள்வி– எவ்வளவு தொகை அரசு உதவித்தொகை கேட்டு மனு கொடுத்தேன் என்றால்?

பதில்– 12ம் வகுப்பு படித்திருந்தால் அரை பவுண் நகை, 50,000/– பணம். 10ம் வகுப்பு படித்திருந்தால் ரூ.25,000/– அரை பவுண் தங்கம்.

கேள்வி– என் மகள் 10 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழை போலிசாரிம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில்– 10 மற்றும் 12ம் வகுப்பு சான்றிதழை கொடுத்தேன்.

கேள்வி– சாட்சியிடம் அவரது மகளின் 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் 12ம் வகுப்பு Attempt Mark Sheet மட்டும் கொடுத்துள்ளேன் என்றும், 12ம் வகுப்பு முழு மதிப்பெண் பட்டியல் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் ?

பதில்– எல்லா மதிப்பெண் பட்டியல்களும் போலீசாரிடம் கொடுத்துவிட்டேன். சாட்சி தாமாக 10ம் வகுப்பு தேர்ச்சி செய்ததற்காக ரூ.25,000/– மற்றும் அரை பவுன் நகை கொடுத்தார்கள் என்று சாட்சியம் அளிக்கிறார்.

கேள்வி– என் மகள் டிகிரி முடித்திருப்பதால் ரூ.50,000/– பணம் மற்றும் ஒரு சவரன் நகை கேட்டுத்தான் மனுவே கொடுத்தேன் என்றால்?

பதில்– ஆமாம்.

கேள்வி– ஆஜர் எதிரி என் மகளின் சான்றிதழை சரிப்பார்த்தபோது B.A. முடிக்காமல் அரியர் வைத்திருந்ததால் பணம் ரூ.25,000/– அரை பவுன் நகை மட்டுமே கிடைக்கும் என்று சொன்னார் என்றால்?

பதில்– அவ்வாறு சொல்லவில்லை, பணம் கொடுத்தால் அடுத்த டேபிள் போகும் என்று சொன்னார்.

கேள்வி – திருமணத்திற்கு முன்பே என் மகள் டிகிரி முடித்துவிட்டார் என்றும், அந்த டிகிரியின் சான்றிதழை போலிசாரிடம் நான் கொடுத்தேனா என்றால்?

பதில்– போலீசாரிடம் கொடுக்கவில்லை.

கேள்வி– எதிரி B.A டிகிரி முடித்திருந்தால் ரூ.50,000/– மற்றும் 1 சவரன் நகை உன் மகளுக்கு கிடைக்கும் என்றும் உங்கள் மகள் 12ம் வகுப்பு வரை படித்திருப்பதால் அவருக்கு ரூ.25,000/– மற்றும் அரை சவரன் நகை மட்டும்தான் கிடைக்கும் என்று சொன்னதால் வேண்டுமென்று அவருக்கு எதிராக விஜிலன்ஸில் புகார் கொடுத்தேன் என்றால்?

பதில்– சரியல்ல, 10ம் வகுப்பு முடித்திருந்தால் ரூ.25,000/– 12ம் வகுப்பு முடித்திருந்தால் 50,000/– நகை அரை சவரன் என்றும் அந்த சமயத்தில் அரசாங்கம் அறிவித்திருந்தது.

கேள்வி– உண்மையில் என் மகள் டிகிரி முடித்திருந்தால் ரூ.50,000/– மற்றும் ஒரு சவரன் நகை கிடைத்திருக்கும் என்றால்?

பதில் –10 வகுப்புக்குத்தான் ரூ.25,000/– 12ம் வகுப்புக்கு ரூ.50,000/– நகை அரை பவுணா ஒரு பவுணா என்று நினைவில்லை.

கேள்வி– போலீசாரிடம் நான் புகார் கொடுத்து ஆஜர் எதிரியை சிக்க வைத்த பின்னர் பணம் கிடைத்துவிட்டதா என்றால்?

பதில்– ரூ.25,000/– பணமும் அரை பவுண் நகையும் பி.டி.ஓ. அலுவலகத்தில் வரவழைத்து கொடுத்தார்கள்.

கேள்வி– முதல் முதலில் நான் என்றைய தினம் ஆஜர் எதிரியை பார்த்தேன் என்றால்?

பதில்– 06ம் தேதி எதிரி என் வீட்டிற்கு ஆஜர் எதிரியும் அவருடன் மற்றொரு பெண் அதிகாரியும் வந்து Verification பார்த்து அலுவலகத்திற்கு வரச்சொன்னார்கள். காபி, டீ செலவு ஆட்டோ செலவு என்று 300/– ரூபாய் வாங்கிக்கொண்டார்கள்.

கேள்வி– நான் எதிரியின் அலுவலகம் சென்று எப்போது எதிரியை பார்த்தேன் என்றால்?

பதில்– 06ம் தேதி போய் அவரை அலுவலகத்தில் பார்த்தேன்.

கேள்வி– எதிரியின் அலுவலகத்திற்கு நான் போனபோது நான்மட்டும்தான் போனேனா என்றால்?

பதில்– என் மகளும் உடன் வந்திருந்தார். அவர் அலுவலகத்திற்கு வெளியில் இருந்தார்.

கேள்வி– அலுவலகத்திற்கு நானும் என் மகளும் போயிருந்தோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால்?

பதில்– சொல்லவில்லை. என் மகள் அலுவலகத்திற்கு வெளியில் இருந்தார்.

கேள்வி– விஜிலன்ஸ் அலுவலகத்திற்கு நான் சென்றபோது மணி என்ன என்றால்?

பதில்– காலை 11.00 மணி இருக்கும்.

கேள்வி– அன்றைய தினம் நான் போனபோது அரசு சாட்சிகள் இருந்தார்களா என்றால்?

பதில்– இல்லை.

கேள்வி– நான் அன்றைய தினம் என்ன நிற பர்ஸ் வைத்திருந்தேன் என்றால் ?

பதில்–கவனமில்லை.

கேள்வி– நான் அன்றைய தினம் Hand Bag எடுத்து சென்றேனா என்றால்?

பதில்– இல்லை.

கேள்வி– நான் வைத்திருந்த பர்சில் என்ன என்ன இருந்தது என்றால்?

பதில்– பர்சில் என்ன வைத்திருந்தேன் என்றால் 7ம் தேதி விஜிலன்ஸ் அலுவலகம் சென்றபோது பஸ் ஸ்பேருக்கான பணம் மட்டும் வைத்திருந்தேன்.

கேள்வி– பரிசோதனை செய்து காண்பித்தபோது என்ன நிறம் மாறியது என்றால்?

பதில்– ரோஸ் கலராக மாறியது.

கேள்வி– அந்த ரோஸ் கலரை சிறிய கண்ணாடி பாட்டிலில் ஊற்றி வைத்துக்கொண்டார்களா என்றால்?

பதில்–ஆம். நான் பணம் கொடுத்தேன். அவர்கள் டெமோ செய்து காண்பித்தார்கள்.

கேள்வி– நான் விஜிலன்ஸ் அலுவலகம் சென்ற பின்னர்தான் அரசு தரப்பு சாட்சிகள் வந்தார்களா என்றால்?

பதில்– 7ம் தேதி புகார் கொடுக்க சென்றேன். அன்று அவர்கள் வரவில்லை. 8ம் தேதி நகை அடமானம் வைத்து பணம் எடுத்துக்கொண்டு போய் கொடுத்தேன். அன்றுதான் டெமோ செய்து காண்பித்தார்கள். நான் விஜிலன்ஸ் அலுவலகத்தில் பணம் கொடுத்த அன்று இரண்டு அரசு தரப்பு சாட்சிகள் வந்தார்கள்.

கேள்வி– அரசு தரப்பு சாட்சிகள் வருவதற்கு முன்பே டெமோ செய்து காண்பித்தார்கள் என்றால்?

பதில்– ஆமாம். அரசு சாட்சிகள் வருவதற்கு முன்பே டெமோ செய்து காண்பித்தார்கள்.

கேள்வி– எத்தனை பெண் காவலர்கள் என்னுடன் வந்தார்கள் என்றால்?

பதில்– என்னுடன் ஒரு பெண் கிருபாவதி என்பவர் வந்தார். அவர் பணம் கொடுத்தபோது உடன் இருந்தார்.

கேள்வி– பணம் கொடுக்க சென்றபோது போலீசார் யாராவது உடன் வந்தார்களா என்றால்?

பதில்– போலீசார் எல்லாம் வாசற்படிக்கு வெளியில் இருந்தார்கள்.

கேள்வி – விஜிலன்ஸ் அலுவலகத்திற்கு நான் எடுத்து சென்ற ரூபாய் நோட்டுக்களின் எண்களை ஒரு வெள்ளை தாளில் எழுதிக்கொண்டார்கள் என்றால்?

பதில்– ஆமாம். நகை ரசீதையும் அவர்கள் வாங்கிக்கொண்டார்கள்.

கேள்வி– எதிரியின் அலுவலகத்திற்கு நான் சென்றபோது அவரின் அலுவலகத்தில் பிரதான நுழைவு வாயில் எந்த திசையில் உள்ளது என்றால்?

பதில்– வடக்கு திசையில் உள்ளது. அதில் நுழைந்துதான் உள்ளே போனோம்.

கேள்வி– எதிரியின் அறை உள்ள அலுவலகம் பிரதான நுழைவு வாயிலிலிருந்து சுமார் 50–60 அடி தூரத்தில் இருக்கும் என்றால்?

பதில்– பிரதான நுழைவு வாயிலில் நுழைந்தவுடன் சுமார் 40 அடி தூரத்தில் வளைந்து அவரின் அலுவலக அறை உள்ளது.

கேள்வி– பணம் கொடுக்க சென்ற அன்று எதிரியின் அலுவலகத்திற்குள் நான் மட்டும் போய் பார்த்துவிட்டு வந்தேனா என்றால்?

பதில்– ஆமாம். என்னுடன் கிருபாவதி என்ற ஒரு பெண் உடன் வந்தார். மற்றொரு பெண் அதிகாரி மற்றும் விஜிலன்ஸ் போலிசார் வெளியில் இருந்தார்கள்.

கேள்வி– பணம் கொடுக்க நான் எதிரியின் அலுவலகம் சென்றபோது அந்த இடத்தில் பொதுமக்கள் இருந்தார்களா என்றால்?

பதில் – பொதுமக்கள் யாரும் இல்லை. அவர் மட்டும்தான் இருந்தார். எனக்கு போன் செய்து வரச்சொன்னார். அதனால்தான் போனேன்.

கேள்வி– எதிரியின் போன் நம்பரை விஜிலன்ஸ் போலிசாரிடம் நான் கொடுத்தேனா என்றால்?
பதில்– நினைவில்லை.

கேள்வி– அரசு சாட்சிகளும், போலீசாரும் ரோட்டில் எங்கு நின்றிருந்தார்கள் என்றால்?
பதில்– அலுவலகத்தின் வாசற்படியில் நின்றிருந்தார்கள்.

கேள்வி– அவர்கள் நின்றிருந்த இடத்திலிருந்து பார்த்தால் எதிரியின் அலுவலகத்திற்குள் என்ன நடக்கிறது என்று தெரியாது என்றால்?
பதில்– அவர்கள் நின்றிருந்த இடத்தில் இருந்து பார்த்தால் தெரியாது.

கேள்வி– ஆஜர் எதிரி எந்த பணமும் என்னிடமிருந்து வாங்கவில்லை என்றும் ரூ.50,000/– பணம் வராது மற்றும் ஒரு பவுண் நகை வராது என்று எதிரி சொன்னதால் வீட்டிற்கு கடன் செலுத்த வேண்டுமே என்ற கோவத்தில் பச்சை நிற டிரேவிற்கு அடியில் பணத்தை நான் வைத்துவிட்டு வந்துவிட்டேன் என்றால்?
பதில்– சரியல்ல.

கேள்வி– ஆஜர் எதிரி அந்த பணத்தை தொடவே இல்லை என்றால்?
பதில்– பணத்தை தொட்டு எண்ணும்போது தான் விஜிலன்ஸ் போலிசார் வந்து பிடித்துவிட்டார்கள்.

கேள்வி– பணம் எண்ணும்போது நான் இருந்தேன் அதன் பின்னர்தான் விஜிலன்ஸ் போலிசார் என்னை வெளியில் அனுப்பிவிட்டார்கள் என்றால் ?

பதில்– ஆமாம்.

கேள்வி– மேற்கண்ட விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால்?

பதில்– அந்த கேள்வியை அவர்கள் கேட்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை.

கேள்வி– எதிரியின் அலுவலகத்திற்கு எதிரியை பார்க்க நான் ஒரு முறைதான் சென்றிருக்கிறேன் என்றால்?

பதில்– பணம் எடுத்துக்கொண்டு வாருங்கள் இல்லை என்றால் வர வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

கேள்வி – நான் முதன்முதலில் பொறிவைப்பின்போதுதான் எதிரியின் அலுவலகம் போனேன் என்றால்?

பதில்– பார்த்தேன். எதிரி பணம் கேட்டார் அதன் பின்னர் விஜிலன்ஸ்க்கு போனேன் அதன் பின்னர் அவரின் அலுவலகம் போனேன்.

கேள்வி – 10ம் தேதிதான் நான் முதன்முதலில் எதிரியின் அலுவலகம் சென்றேன் என்றால்?

பதில்– தவறு. 6ம் தேதி அவர் என்னுடைய வீட்டிற்கு வந்து Verification முடித்துவிட்டு வரச்சொன்னதின் பெயரில் நான் 06ம் தேதி அவரின் அலுவலகம் போயிருந்தேன்.

கேள்வி– நான் கொடுத்த மனுவிற்கு முன்பே நிரைய மனுக்கள் நிலுவையில் இருந்ததால் அவர்கள் மனுவிற்கு முன்பே என்னுடைய மனுவினை எடுக்க வேண்டும் என்று எதிரியை நான் வற்புறுத்தினேன் என்றால்?

பதில்– இல்லை.

கேள்வி – நான் கொண்டு சென்ற பர்ஸ்ஜ போலிசார் வாங்கி வைத்துக்கொண்டாரகள் என்றால்?

பதில்– 10 வருடங்கள் ஆகிவிட்டதால் மறந்துவிட்டது.

கேள்வி – அந்த பர்ஸிலிருந்துதான் பவுடரை கலந்துதான் இளம்சிவப்பு நிறமாகமாற்றினார்கள் என்றால்?

பதில்– ஆம். சாட்சி மீண்டும் அப்படி எதுவும் நடக்கவில்லை விஜிலன்ஸ் அலுவலகத்தில்தான் டெமோ செய்து காண்பித்தார்கள். எதிரி தொட்டால் இது மாதிரி கலர் மாறும் என்று சொல்லி பரிசோதனை செய்து காண்பித்தார்கள்.

கேள்வி –எதிரி பணம் எதுவும்வாங்கவில்லை என்றும் பர்சிலிருந்து பணத்தை எடுத்து கொடுத்து அந்த கரைசல் பரிசோதனையில் இளம் சிவப்பு நிறமாக மாறியதைத்தான் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளனர் என்றால்?

பதில்– சரியல்ல.

கேள்வி – எனக்கு பணம் கொடுக்கும் அதிகாரம் எதிரிக்கு இல்லை என்றும் மேல் அதிகாரிகளுக்குத்தான் இருந்தது என்றும் அதனால் எதிரி என்னிடம் பணம் கேட்டதாக சொல்வது உண்மை அல்ல என்றால்?

பதில்- சரியல்ல. மனு எதிரியின் டேபிளில்தான் இருந்தது. அவர்தான் Process செய்து மற்ற டேபிள்களுக்கு அனுப்ப வேண்டும்.

கேள்வி – ஒவ்வொரு மனுவையும் பரிசீலனை செய்ய ஐந்து அதிகாரிகள் உள்ளனவர் என்றும், அதனால் எதிரி பணம் கேட்டதாக சொல்வது தவறு என்றால்?

பதில்– எதிரிதான் முதன்முதலாக என் வீட்டிற்கு Verification க்கு வந்தார்.

கேள்வி– பணம் கொடுத்ததாக நான் சொல்வதும், என்னுடன் ஒரு அரசு சாட்சி வந்ததாக சொல்வதும் பொய் என்றும், எதிரி பணம் எதையும் என்னிடம் வாங்கவில்லை என்றும் பணத்தை தொடவும் இல்லை என்றால் ?

பதில்– சரியல்ல.

கேள்வி– இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால்?

பதில் – சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.06.09 17:34:12 +0530